ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே ஐந்து தனியார்கள் வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவற்றிலிருந்து 20 ஆயிரம் டன்கள் வனஸ்பதி உற்பத்தியாகிறது. நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான வனஸ்பதி தேவையில்லை—காரணம் நம்முடைய மாநிலத்திலேயுள்ளவர்கள் கொழுப்பு சத்து அதிகமாகவுள்ள வனஸ்பதியை அதிகமாக ஒத்துக்கொள்வதில்லை என்ற காரணத்தினால் 12 ஆயிரம் டன் நமக்குச் செலவாகிறது. இதிலேயே மீதம் உள்ள 8 ஆயிரம் டன்னை வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறோம். இந்தத் தொழில் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்படுகிற காரணத்தினாலே ஏற்கனவே உள்ள தனியார் துறையோடு போட்டிபோட்டு செம்மையாக நடத்தமுடியுமா, லாபகரமாக நடத்தமுடியுமா என்பதை யோசித்துத்தான் வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிக்காமல் முதல் கட்டமாக திருவண்ணாமலையிலே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே எண்ணெய் ஆலை ஒன்று ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகள்

*** 87 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஸ், லாரி, கார்களில் கண்களைக் கூசும் வகையில் புதிய ரக பல்புகளை உபயோகப்படுத்தி வருவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகள் வெள்ளை நிறத்தில்தான் இருக்க வேண்டும் என்று, 1940-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, 296-ல் ஏற்கனவே வழி செய்யப்பட்டு இருக்கின்றது. முகப்பு விளக்குகளில் வெள்ளை நிறமல்லாத எந்த பல்புகளை உபயோகித்தாலும் மேற்சொன்ன விதியின்படி குற்றமாகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேற்கண்ட விதிகளை மீறியதற்காக நடப்பு ஆண்டிலே எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ? அல்லது அபராதம் விதிக்கப்பட்டார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

1974 சனவரி 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே முழுவதற்குமான விவரம் என்னிடத்திலே இல்லை. 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே 50 பேர்கள் மீதும், ஜூலை 71-ல் 100 பேர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, நல்ல மழை காலத்திலோ அல்லது பனி பெய்கிற காலத்திலோ வெள்ளை விளக்குகள் மூலம் வெளிச்சம் அதிகமாகத் தெரியாது. அந்த நேரங்களிலே மஞ்சள் விளக்குகள் இருந்தால்தான் ஓட்டுபவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். வெள்ளை விளக்குகளை மட்டும் வைத்து ஓட்ட முடியாது. ஆகவே, அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் நுட்பம் நிறைந்த கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தொழில் நுட்ப வல்லுநர்கள் மஞ்சள் விளக்குகளை வைத்து ஓட்டுவதால் கண்கள் கூசும். அது மட்டுமல்ல. அதைப் பார்ப்பவர்களுக்கும் தலைவலி போன்றவை வரும், அதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய தோற்றுவாயாக அவை இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, வெள்ளை விளக்குகளில் வெளிச்சம் தெரியாது என்று சொல்வது சரியான கருத்து அல்ல என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மீறி பஸ், லாரிகள் போன்றவற்றிலே அதிகமான பிரகாசமுள்ள லைட்டுகளையும் பயங்கரமான சத்தங்கள் உள்ள ஹார்ன்களையும் பயன்படுத்துகிறார்களா ? இன்றைக்கு அப்படி மீறப்படுவதைத் தடுப்பதற்காக ஒரு சுற்றறிக்கையாவது விடுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுற்றறிக்கையைவிட விதிகளே தீவிரமாக இருக்கின்றன, அவற்றைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டுமானால் மேற்கொள்ளலாம்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, பொதுவாகவே முகப்பு விளக்குகள் எரிவதற்கு ஒரு பேட்டரி போதுமானது. ஆனால் இப்பொழுது 2, 3 பேட்டரிகள் வைத்து அதனால் 'பிரிக்ளிங்' ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு அதனால் திணறக்கூடிய அளவுக்கு இருக்கிறது, அதைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலேதான் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன, நான் ஏற்கனவே சொல்லியபடி நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

திரு. எம். தேவராசன் : இப்பொழுது புதிதாக ஆட்டோ டிப்பர் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோமே, அதைப் பயன்படுத்த அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது ஒரு புதிய தகவல்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இப்படி விபத்துக்களைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. லாரிகளுக்கு இப்பொழுது மஞ்சள் வர்ணம் பூசப்படுவதால் விபத்துக்கள் தடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த உத்தரவை இப்பொழுது தளர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது உண்மை இல்லை.

Tyres for motor vehicles

* 88 *Q*.—THIRU N. DENNIS,
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that there is a shortage of tyres in the open market; and

(*b*) if so, the action taken thereon?